DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 15 / 2023
Deposition of PW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு. என். நாட்ராயன் |
| Father's / Husband Name | : | நமசிவாயம் |
| Village | : | பாலக்கோம்பை |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | Garmants நடத்திவருகிறேன். |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து Garmants நடத்தி வருகிறேன். தொழில் செய்து வருகிறேன். எதிரிக்கு சொந்த ஊர் எனது ஊருக்கு அருகில் உள்ள இராயவேலூர் என்று சொன்னால் சரிதான். எதிரியானவர் திருப்பூரிலும் எனது ஊரைச்சேர்ந்த மக்களிடமும். ஏலச்சீட்டு நடத்திவருகிறார் என்று சொன்னால் சரிதான். எனது உடன்பிறந்த சகோதரி நாகஜோதி என்று சொன்னால் சரிதான். எதிரி நடத்திவரும் ஏலச்சீட்டில் நான் எதுவும் சேரவில்லை எனது சகோதரி சேர்ந்திருக்கலாம். நான் ரெடிமேட் தொழில் செய்துவருவதால் வருமானவரி கணக்கு காட்டுவேன் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் எவ்வளவு காலமாக பழக்கவழக்கம் என்றால் சிறு வயதிலிருந்தே பழக்கம். எதிரி என்னிடம் 17.04.2022 தேதி 2,00,000 ரூபாய் வாங்கினார்.

2) நான் கடன் தொகையை தொழிலில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்றால் சரியல்ல எனது மனைவியிடம் இருந்த வாங்கி கொடுத்தேன்.

எனது மனைவி எனது கம்பெனியில் வேலை செய்து சம்பளம் வாங்கிகொள்வார். எனது மனைவி கொடுத்த பணத்தில் இருந்து எதிரிக்கு கடன் கொடுத்தேன். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக 23.05.2022 தேதியிட்ட காசோலை ஒன்றையும் 01.06.2022 என்று தேதியிட்ட காசோலை ஒன்றையும் கொடுத்தார். மேற்படி காசோலை எண் எனக்கு நினைவில் இல்லை.

3) மேற்படி தொகையை 2 மாதத்திற்குள் திரும்பி செலுத்திவிடுவதாக சொல்லித்தான் மேற்படி இரண்டு காசோலையும் கொடுத்தார். மேற்படி இரண்டு காசோலையை பூர்த்தி செய்யாத நிலையில் தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலையிலும் பணத்தையும் கையொப்பத்தையும் அவர் தான் பூர்த்தி செய்தார். 18.08.2022 தேதி இரண்டு காசோலைகளையும் collection போட்டடேன். 19.08.2022 தேதி மேற்படி இரண்டு காசோலைகளும் funds insufficient என திரும்பி விட்டது. 06.09.2022 தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை அவர் வாங்கமறுத்துவிட்டார். நான் எனது புகார் மனுவில் எதிர்மனுதாரர் அறிவிப்பை வாங்கமறுத்துவிட்டார் என சொல்லியுள்ளேனா என்று கேட்டால் எனக்கு நினைவில் இல்லை.

4) நான் தாக்கல் செய்துள்ள ExP.5 இல் இந்த நோட்டீஸ் கிடைத்த 15 தினங்களுக்குள் மேற்கண்ட இரண்டு காசோலைகளுக்கான தொகையை செலுத்த வேண்டும் என்று தவறும் பட்சத்தில் தங்கள் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138 கீழ் உரிய வழக்கு தொடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த காசோலைக்குரிய தொகை 2,00,000 என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138(b) கீழ் அனுப்பப்படும் அறிவிப்பில் கசோலைக்குரிய தொகையை குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றும் அப்படி குறிப்பிடாமல் இருந்தால் மேற்படி அறிவிப்பானது Valid Notice ஆகாது என்று சொன்னால் சரியல்ல.

6) 2017 – 2018 ஆண்டுகளில் நானும் எனது சகோதரி நாகஜோதியும் எதிர்மனுதாரரிடம் தலா 1,00,000 மற்றும் 2,00,000 த்திற்கு உடைய ஏலச்சிட்டு போட்டியிருந்தோம் என்றால் சரியல்ல. எனது சகோதரி நாகஜோதி ரூபாய் 2,00,000 த்திற்கு ஏலச்சீட்டு போட்டுயிருக்கலாம். நான்

போட்டுயிருந்த 1,00,000 ஏலச்சீட்டியில் நான்கு தவணை கட்டவில்லை என்றும் எனது சகோதரி நாகஜோதி போட்டுயிருந்த 2,00,000 ஏலச்சீட்டியில் மூன்று தவணை கட்டவில்லை என்றும் அதற்கு ஆதரவாக நான் பணம் கேட்டதற்கு அவர் பொறுப்பாக கொடுத்த காசோலையைகள் தான் தாவா காசோலைகள் இரண்டு என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மை விபரங்களை மறைத்து தாவா காசோலையை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏலச்சீட்டுக்காக கொடுக்க வேண்டிய தொகைக்கா ரூபாய் 1,00,000 த்திற்காக மட்டும் எதிரியின் சகோதரர் பிரபாகரன் மற்றும் பிரபு என்னிடம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.07.02 16:44:25 +0530

Judicial Magistrate,
Andipatti.